# ஊடக வெளியீடு

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP)

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**தொலைபேசி : 011-2147401** **தொ.நகல்: 011-2147412** **செப்டெம்பர் 02, 2016**

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் உற்பத்தித் துறைக்கான கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணைக் கணிப்பிட ஆரம்பித்துள்ளது. கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது (IIP) மிக முக்கியமான குறிப்பிட்ட பொருளாதார குறிகாட்டியாக உள்ளதுடன் அதன் முக்கிய நோக்கம் கைத்தொழில் உற்பத்தியின் அளவில் ஏற்படும் மாற்றங்களை வெளிக்கொணர்வதாகும். மாதாந்த (IIP) 63 நாட்களுக்கு ஒரு தடவை வெளியிடப்படுகின்றது. இது பொருளாதார அபிவிருத்தியின் திருப்புமுனைகளை அடையாளங்காண பயன்படுகின்றது. தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு (IIP) தொகுக்கப்பட்டது. வேறுபட்ட ஆண்டை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்ட IIP சுட்டெண்கள் ஒப்பிடப்பட முடியாதவை.

2016 இரண்டாம் காலாண்டின் IIP தொடர்பில் அதிகாரபூர்வமான அறிவிப்பின் போது தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஏ.ஜே.சத்தரசிங்க அவர்கள் தெரிவிக்கையில், சுட்டெண்ணைக் கணிப்பதற்காக கைத்தொழில் உற்பத்திகளின் பங்காற்றுகையில் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட வருடாந்த அளவீடு - 2015 தரவுகள் பயன்படுத்தப்பட்டது. உற்பத்தித் துறையின் பெறுமதி சேர் அடிப்படையில் எடைகளின் மதிப்பு பெறப்பட்டன. நாட்டின் மொத்த கைத்தொழில் உற்பத்தியில் உணவுப் பொருள் உற்பத்தி அதிகளவு பங்களிப்பை செலுத்துவதுடன் (35.2%) ஆடை அணிகலன் உற்பத்தி (19.8%) மற்றும் உலோகமல்லாத தாதுப் பொருட்கள் போன்ற கைத்தொழில்கள் (7.8%) என்றவாறு அடுத்த இரண்டு நிலைகளை பிடித்துள்ளன.

2016ம் ஆண்டு இரண்டாம் காலாண்டில் வெளியிடப்பட்ட IIP மதிப்பீடுகளின் படி, 2015 ஆம் ஆண்டின் சராசரி வருடாந்த சுட்டெண்களுடன் ஒப்பிடுகையில் 2016 ஏப்ரல் மாத உற்பத்தியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 4.7% ஆல் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 2015 சராசரி மாதாந்த சுட்டெண்டுன் ஒப்பிடுகையில் மே மாதத்தின் நேரப் பெறுமதி 2.6% ஆகவும் ஜுன் மாதத்தில் 6.1% ஆகவும் அதிகரிப்பைக் காட்டுகின்றது. 2015 ஆம் ஆண்டுன் ஒப்பிடுகையில் 2016 இரண்டாம் காலாண்டுக்கான மொத்த கைத்தொழில் சராசரி உற்பத்தி 1.1% ஆல் அதிகரித்துள்ளது.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**

| மாதம், வருடம் | IIP(2015=100) |
|---|---|
| ஏப்ரல் -2016 | 95.3 |
| மே -2016 | 102.6 |
| ஜுன் -2016 | 106.1 |
| 2ம் காலாண்டு-2016 | 101.1 |

2015 சராசரி மாதாந்த உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2016 ஜுன் மாத உற்பத்திகளில் ஆடை அணிகலன்கள் உற்பத்தி (15.6%), புகையிலைப் பொருட்கள் (14.6%) குறிப்பிடக் கூடியளவு அதிகரிப்பைக் காட்டுகிறது. உணவு உற்பத்தி வீதம் ஏப்ரல் மாதத்தில் 2.1% ஆல் வீழ்ச்சியையும் மே மற்றும் ஜுன் மாதங்களில் 2.2% மற்றும் 2.4% முறையே அதிகரிப்பையும் காட்டுகிறது. உணவு உற்பத்தி மற்றும் குடிபான உற்பத்திகளானவை முதலாம் காலாண்டில் 0.8% மற்றும் 2.7% ஆக முறையான அதிகரிப்பைக் காட்டியது. ஏப்ரல், ஜுன் மாதங்களில் ஏனைய உலோகமல்லாத உற்பத்திக் கைத்தொழில் 1.9%, 2.5%, 8.7% ஆல் அதிகரிப்பை காட்டி நிற்கின்றதுடன் 2015 ஆம் ஆண்டுசராசரி உற்பத்திக் கைத்தொழிலுடன் ஒப்பிடுகையில் இக்கைத்தொழில் சுட்டெண் காலாண்டில் 1.1% அதிகரிப்பை காட்டுகிறது. (மேலதிக தகவல்களுக்கு www.statistics.gov.lk/Industries)